கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சிபாரிசுகள் பரிசீலனையில் இருக்கின்றன என்று ஏற்கனவே குறிப்பிட்டேன். பரிசீலனை முடிவு பெற்ற பிறகு வேண்டுமானால், அதைச் சபையில் வைப்பதற்கு ஆட்சேபனை இல்லை. பரிசீலனை செய்து, சில சிபார்சுகளை ஏற்றுக் கொள்ளலாம் ; பலவற்றைத் தள்ளிவிடலாம். அல்லது பலவற்றை ஏற்றுக் கொள்ளலாம் ; சிலவற்றைத் தள்ளிவிடலாம். இப்பொழுது அதைச் சபையில் வைப்பதற்கில்லை.

திரு. நா. துரைப்பாண்டியன் : இந்தக் குழு ஜில்லா ஜில்லாவாக வந்தபோது, அந்தந்த ஜில்லாவில் கட்சிச் சார்பற்ற முறையில் எல்லாக் கட்சியினரையும் கலந்து கொண்டார்கள் என்பது உண்மைதானே ?

கனம் திரு சே. ம. அ. மஜீத் : அந்த விவரம் என்னிடம் இல்லை .

திரு. ஜே. மாதா கவுடர் : தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அக்கறை எடுத்துக் கொண்ட மாதிரி எதிர்க் கட்சியினரும் அக்கறை எடுத்துக் கொண்டாலும் சர்க்கார் அதை ஆட்சேபிக்கப் போவதில்லையே ? ஏன் எதிர்க் கட்சிக்காரர்கள் இதற்காக சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்று அறியலாமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எதிர்க் கட்சியினரும் ஆட்சேபம் ஒன்றும் தெரிவிக்கவில்லை. பாராட்டுதலை மறைமுகமாகவே அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, 1958-ம் ஆண்டில் இயற்றப்பட்ட பஞ்சாயத்துச் சட்டத்திற்கு தினத்திற்கு ஒரு திருத்தம், புதிது புதிதாக வந்து கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. இதை விரிவாகப் பரிசீலித்து முடிவு எடுக்கும் வகையில், சர்வ கட்சியினரைக் கொண்ட, சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைத்து மறு பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி உத்தேசம் இல்லை. ஏற்கனவே இது சம்பந்தமாக அவ்வப்போது சர்க்கார் இலாக்காவே என்ன என்ன திருத்தம், என்ன என்ன மாற்றம் செய்யவேண்டும் என்பதைக் குறித்த விஷயத்தைக் கவனித்து வருவதால், கனம் அங்கத்தினர் கூறுகிறபடி குழு அமைத்துப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

* 40 **கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களுக்கு, மான்யம் வழங்குவதற்கென அவை ஏ, பி, சி, டி, என்று பிரிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், இதை மாற்றி அமைக்கும் **உத்தேசம் உண்டா ?**

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) பஞ்சாயத்து யூனியன்களின் தற்போதைய வகைப் பாட்டினைத் திருத்துவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தற்போதைய பிரிவினை எந்த அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது? இதை எந்த அடிப் படையில் மாற்றியமைக்க அரசாங்கம் உத்தேசிக்கிறது என்பதை அறியலாமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : "லாண்டு ரெவின்யூ பெர் காபிடா பேஸிஸ்" இல்தான் முன்பு, ஏ, பி, சி, டி என்று பிரிக்கப்பட்டது. படையாகக் கொண்டு செய்யலாமா என்று பரிசிலனை நடந்து கொண்டு வருகிறது. ரூரல் டெவலப்மெண்ட் டைரக்டரிடமிருந்து இன்னும் அம்மாதிரி முடிவான தகவல் ஒன்றும் வரவில்லை. ஓர்க்கிங் க்ரூப்பும் பஞ்சாயத்து அடிப்படையில் இதே அளவில்தான் சிபாரிசு செய்திருக்கிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தற்போது சில ப்ளாக்குகளில் இரண்டு பிர்க்காக்கள் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று இப்பொழுது 'பெர் காபிடா ஜெனரல் ரெவின்யூ' வை அடிப் நஞ்சைப் பகுதியாக இருக்கலாம். மற்றொன்று, முற்றிலும் வறண்ட புஞ்சைப் பகுதியாக இருக்கலாம். இரண்டும் சேர்ந்து ஒரே ப்ளாக்காக இருப்பதன் காரணமாக, 'ஏ' பிரிவின்கீழ் வரக்கூடிய நிலை இருக்கிறது. இத்தகைய ப்ளாக்குகளில் அபிவிருத்தியின் வேகம் தடைப்பட்டிருக்கிற செய்தி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இத்தகைய 'ஏ' ப்ளாக்கில் அதற்குரிய உதவித் தொகையை மக்கள் கொடுக்க இயலாத நிலையில், அத்தகைய ப்ளாக்கில் வளர்ச்சி தடைப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறதா? காலா காலத்தில் இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தி விமோசனம் அளிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கனவே பதிலளிக்கும்போது குறிப்பிட்டேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இது அமலாகும்போது, அநேகமாக இந்த க்ளாஸிபிகேஷனைத் திருத்தும் விஷயத்தையும் அரசாங்கம் பரிசீலிக்கும். கனம் அங்கத் தினர் குறிப்பிட்டபடி, ஒரு சில ப்ளாக்குகள் அவ்விதமாக இருக் கின்றன என்பதை நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால், அது தவிர்க்க முடியாதது. நஞ்சை நிலமாகப் பார்த்து ப்ளாக் அமைப் பது, அல்லது புஞ்சை நிலமாகப் பார்த்து ப்ளாக் அமைப்பது என்பது அனுபவ சாத்தியமற்றது, நடைமுறையில் ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. ம. கமலநாதன் : குறைந்த எண்ணிக்கையுள்ள பஞ்சாயத் துக்களையும், அதிகமான எண்ணிக்கையுள்ள பஞ்சாயத்துக்களையும் கொண்ட பல பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன.

[2nd August 1966

வழங்கப்படும் மானியம்; எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரியாக இருப்பதால், அதிக எண்ணிக்கை உள்ள பஞ்சாயத்தில் அதிகமான அபிவிருத்தி வேலைகள் செய்ய முடியாத நிலை இருப்பதால், அதிகமான பஞ்சாயத்துக்கள் இருக்கும் ப்ளாக்குகளாகப் பிரிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மூலக் கேள்வியிலிருந்து இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III.—ADJOURNMENT MOTIONS.

(1) PROMULGATION OF ORDER UNDER SECTION 144, Cr. P.C.

MR. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion *re.* the issue of orders under section 144 Cr.P.C.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, நமது சட்டசபை கூடுகிறபோதெல்லாம் சட்டசபைக்கு வரும் வழியில் யாரும் கூடக் கூடாது என்று போலீசார் தடை உத்தரவு பிறப்பிக்கிறார்கள். இது நம்முடைய சட்டசபையையே அவமதிக்கிற மாதிரி இருக்கிறது. என்னுடைய 15 வருட சட்டசபை அனுபவத்திலே, இந்தச் சட்டசபையை நடத்த முடியாமல் ஜனங்கள் தடுத்த நிகழ்ச்சியைப் பார்க்கவில்லை. வேறு எங்கே எப்படி இருக்குமோ அது எனக்குத் தெரியாது. அப்படியிருக்கும் போது, நம்முடைய ராஜ்யத்திற்கு மட்டும், இந்தச் சபைக்கும், நம்முடைய மக்களுக்கும் கேவலத்தைத் தேடும் முறையில், ஒவ்வொரு தடவையும் சட்டசபை கூடும்போதெல்லாம் போலீசார் தடை உத்தரவு பிறப்பிப்பதானது மிகவும் கேவலமாக இருக்கிறது ; நம்முடைய மக்களை அவமதிப்பதாக இருக்கிறது ; மக்கள் பிரதிநிதிகள் எப்படி வேலை செய்கிறார்கள் என்று பார்க்கவும் அவர்களிடத்தில் முறையிடுகளைத் தெரிவிக்க வேண்டும் என்றும் தனியாகவோ சேர்ந்தோ வருபவர்களுடைய, அதுவும் அமைதியான முறையில் வர விரும்புகிறவர்களுடைய சுதந்தரத்தைப் பறிப்பதாக இருக்கிறது. ஆகவேதான், இந்தத் தடை உத்தரவிற்கு அவசியம் இல்லை, இந்தத் தடை உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்பதை இந்தச் சபையின் மூலமாகக் கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் நான் சபையின் அலுவலை ஒத்திவைத்து இந்த விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும் என்று விரும்புகிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தைப் பார்க்க வருகின்றவர்களுக்குத் தடை ஒன்றும் இல்லை. ஆனால் கூட்டமாகக் கூடக் கூடாது, சட்ட